# புதிய தலைமுறை அறக்கட்டளை

இதழ்: 2
நாள் & மாதம்: மார்ச் 1, 2020

[இளைஞர் திறன் மேம்பாடு மற்றும் கிராமப்புறக் கல்விக்காக பணியாற்றும் ஓர் அரசு சாரா தொண்டு நிறுவனம்]

மின்னனு செய்தி மடல்

- **தொழில் முனைவோராக உருவாகலாம்**
  சுயதொழில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கருத்தரங்கம் மற்றும் கண்காட்சிகள்
- **கிராமப்புற மாணவர்களின் முன்னேற்றம்**
  இலவச கிராமப்புறக் கல்வி மையங்கள்
- **கிராமப்புற மருத்துவ முகாம்கள்**
  வள்ளியம்மை அம்மாள் கிராமப்புற மருத்துவ உதவித் திட்டம்
- **கிராமப்புற மற்றும் அரசுப் பள்ளி மாணவர்கள் கல்வி முன்னேற்றம்**
  விழுதுகள் இலவச உயர்கல்வி திட்டம்
- **பெண்கள் முன்னேற்றம்**
  வள்ளியம்மை அம்மாள் தையற் பள்ளி
- **சாலை பாதுகாப்பு நிகழ்ச்சிகள்**
  கருத்தரங்கம் & விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

## புதிய தலைமுறை அறக்கட்டளை விழுதுகள் - கலை மற்றும் சமுதாயப்பணி வருடாந்திர விழா - 2020



புதிய தலைமுறை அறக்கட்டளையின் விழுதுகள் இலவச உயர்கல்வி திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு மாவட்டம் பொத்தேரியில் உள்ள எஸ்.ஆர்.எம் பல்கலைகழகத்தில் 234 மாணவர்கள் பயின்று வருகின்றனர். அவர்களின் தனித்திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக புதிய தலைமுறை அறக்கட்டளையின் சார்பில் கடந்த மூன்றாண்டுகளாக ஒளியேற்றுதல் (ILLUMINATE-AN ANNUAL FESTIVAL OF KNOWLEDGE, SPORTS & COMMUNITY WORK BY SRM-PTF VIZHUTHUGAL SCHOLARSHIP STUDENTS) என்ற நிகழ்ச்சி பிப்ரவரி 8 & 9, 2020 ஆகிய இருநாட்கள் பொத்தேரியில் உள்ள எஸ்.ஆர்.எம் பல்கலைகழகத்தில் நடைபெற்றது. 150க்கும் அதிகமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சி மற்றும் விளையாட்டுபோட்டிகள் (ஆடல், பாடல், பட்டிமன்றம்) ஆகியவை நடைபெற்றது. முதல் நாள் நிகழ்வில் மாணவர்கள் தொழில்முனைவோராக முன்னேறுவதற்கு தேவையான தகுதிகள் குறித்து எஸ். இராமசாமி, பொது மேலாளர், Great Lakes Institute of Management, Manamai, Chengalpattu Dist. மற்றும் வெற்றிகான வழிகள் என்ற தலைப்பில் வி. சந்திரசேகரன், மூத்த ஆலோசகர், புதிய தலைமுறை அறக்கட்டளை ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். மேலும் இந்நிகழ்ச்சியில் எஸ்.ஆர்.எம். பல்கலைகழகத்தில் இருந்து முனைவர். கே. வைத்தியநாதன், இயக்குநர், விளையாட்டுத்துறை, மற்றும் எஸ்.எம். நந்தகோபால், ஆலோச்கர் - விளையாட்டுத்துறை மற்றும் புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் து.வே.வெங்கடகிரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கல்லூரி மாணவிகள் கலந்து கொண்ட ஏற்றுமதி & இறக்குமதி கருத்தரங்கம் [கொடைக்கானல்]



கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைகழகத்தில் புதிய தலைமுறை அறக்கட்டளை - ISRB Expo, சென்னை மற்றும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல சார்பில் சுயதொழில் விழிப்புணர்வு கருத்தரங்கம் ஜனவரி 25 & 26, 2020 சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இருநாட்கள் நடைபெற்றது.

தேனி மாவட்டத்தில் உள்ள சரஸ்வதி நாடார் கல்லூரியைச் சேர்ந்த 50 மாணவிகள் பேராசிரியருடன் ஏற்றுமதி இறக்குமதி தொழில் குறித்த விவரங்களை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தல் வாகனம் ஏற்பாடு செய்து கொடைக்கானலில் நடைபெற்ற இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்டனர். மாணவிகளின் ஏற்றுமதிக்கான பொருட்களை தேர்ந்தெடுக்கும் வழிமுறைகள், ஏற்றுமதி செய்வதற்கு நாடுகளை தேர்ந்தெடுக்கும் வழிமுறைகள், தொழில் குறித்த அடிப்படை தகவல்கள் போன்ற பல்வேறு சந்தேகங்களுக்கு சென்னையை சேர்ந்த ஏற்றுமதி வர்த்தக துறை ஆலோசகர், சிவராமன் விளக்கமளித்தார்



## வாயலூர், கல்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம் இலவச பொது மருத்துவ முகாம்




புதிய தலைமுறை அறக்கட்டளையின் வள்ளியம்மை அம்மாள் கிராமப்புற மருத்துவ உதவித் திட்டம், SRM மருத்துவக்கல்லூரி & மருத்துவமனை, பொத்தேரி மற்றும் கிரேட் லேக்ஸ் இன்ஸ்டியூட் ஆப் மேனேஜ்மெண்ட், சென்னை இணைந்து 16 பிப்ரவரி, 2020 அன்று செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டம் வாயலூர் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பொது மருத்துவம் முகாமினை நடத்தியது. இந்த முகாமில் பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இ.சி.ஜி. பரிசோதனை, காது, மூக்கு & தொண்டை நோய், சர்க்கரை நோய் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, கண் நோய், எலும்பு முறிவு பரிசோதனை போன்ற நோய்களுக்கு பரிசோதனை செய்து மருத்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. இந்த முகாமில் 127 நபர்கள் கலந்து கொண்டு பலன் பெற்றனர். முகாமில் 40 நபர்களுக்கு மேல் கண் பார்வை குறைபாட்டிற்காக சிகிச்சை மேற்கொண்டனர்.



## "உலா வரும் செயற்கைக் கோள்" மாணவர்கள் அசத்தும் அரியமங்கலம் [திருச்சி]



திருச்சி மாவட்டம் அரியமங்கலம் கிராமத்தில் உள்ள புதிய தலைமுறை அறக்கட்டளையின் கிராமப்புற கல்வி மையத்தில் 20க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகிறார்கள். மையத்தின் ஆசிரியை ஜெயந்தி அவர்கள் மாணவர்களுக்கு ஆர்வமுடன் கல்வி கற்பித்து வருகிறார். புதிய தலைமுறை அறக்கட்டளையின் சார்பில் பிப்ரவரி 5, 2020 அன்று செயலாளர் து.வே.வெங்கடகிரி மற்றும் திட்ட மேற்பார்வையாளர் சாதிக் ஆகியோர் மையத்தை ஆய்வு செய்து மாணவர்களுடன் கலந்துரையாடினர். மேலும் அறக்கடளையின் சார்பில் ஆங்கில-தமிழ் அகராதி மையத்திற்கு வழங்கப்பட்டது. 4 ஆம் வகுப்பு மாணவன் மகேஷ்வரன் பாடிய செயற்கைகோள் பற்றிய பாடல் **"தகவல் தொடர்பில் உதவிடுமே! தன்னிச்சையாக இயங்கிடுமே ! அருகில் சுற்றும் கோள்களையும் அழகாய் நிழற்படம் எடுத்திடுமே !"** மிகவும் வியப்பை அளித்தது.

**இந்திய சிறுதொழில் மற்றும் கிராமப்புற வணிக கண்காட்சி - 2020**

நாள்: 11 & 12, மார்ச், 2020, இடம்: ஹிந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்,
அரங்கம் (STALL) மூலம் கலந்து கொள்ள கட்டணம் உண்டு, பார்வையாளர்கள் அனுமதி இலவசம் !

தொடர்புக்கு: 8754417500, 8754417338, 8754417308

OUR SPONSORS

SRM ENGINEERING CONSTRUCTION CORPORATION LTD.

வெளியிடுவோர் - புதிய தலைமுறை அறக்கட்டளை
எண்: 24, ஜி.என்.செட்டி சாலை, தி.நகர். சென்னை - 600 017 | வலை:www.ptfindia.org. www.isrbexpo.org | மின்னஞ்சல்: contact@ptfindia.org